சென்னை மாநகர்க் கல்வெட்டுகள்

பதிப்பாசிரியர்
முனைவர் இரா.நாகசாமி

பொதுப்பதிப்பாசிரியர்
முனைவர் தி.ஸ்ரீ.ஸ்ரீதர், இஆப.
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை-600008.

சென்னை மாநகர்க்
கல்வெட்டுகள்

பதிப்பாசிரியர்
முனைவர் இரா. நாகசாமி
இயக்குநர் (ஓய்வு), தொல்லியல் துறை

பொதுப்பதிப்பாசிரியர்
முனைவர் தி.ஸ்ரீ.ஸ்ரீதர், இஆப,
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை-600 008
2009

தொல்லியல் துறை வெளியீட்டு எண் 10
முதற்பதிப்பு 1970
இரண்டாம் பதிப்பு 2009

© தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை மாநகர்க் கல்வெட்டுகள்

பதிப்பாசிரியர்
முனைவர் இரா. நாகசாமி

பொதுப்பதிப்பாசிரியர்
முனைவர் தி.ஸ்ரீ.ஸ்ரீதர், இஆப,

விலை. ரூ. **166-00**

(முன் அட்டைப் படங்கள்: திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் கோபுரம்
மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயில் கோபுரம்

பின் அட்டைப் படங்கள்: திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலிலுள்ள பல்லவ மன்னன்தந்திவர்மன் கல்வெட்டு
மயிலாப்பூர் விருப்பாட்சீஸ்வரர் கோயில் ஐஞ்சு வண்ண மணிக்கிராமக் கல்வெட்டு -13-ஆம் நூற்றாண்டு)

முனைவர் தி.ஸ்ரீ.ஸ்ரீதர், இ.ஆ.ப.
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

தொல்லியல் துறை,
தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை,
சென்னை - 600 008
30-07-09

பதிப்புரை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை தமிழ்நாட்டிலுள்ள கல்வெட்டுகளைப் படியெடுத்து நூலாக வெளியிடும் பணியினை முதன்மைப் பணியாக மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள சுமார் 25000 கல்வெட்டுகளில் 22000 கல்வெட்டுகள் இதுவரை படியெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் கல்வெட்டு முனைப்புத் திட்டம் எனும் பெயரில் கடந்த 2004-ஆம் ஆண்டு முதல் 2009-ஆம் ஆண்டு வரை சுமார் 12000 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதுவரை படியெடுத்துள்ள 22000 கல்வெட்டுகளில் 5200 கல்வெட்டுகள் 33 தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வெளியிட்டுள்ள 33 கல்வெட்டுத் தொகுதிகளில் முதல் கல்வெட்டுத் தொகுதியாக 'சென்னை மாநகர்க் கல்வெட்டுகள்' 1970-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டதாகும். சென்னை மாநகர்க் கல்வெட்டுத் தொகுதியில் சென்னையிலுள்ள 31 பகுதியிலுள்ள கோயில்களில் மொத்தம் 247 கல்வெட்டுகள் வெளிவந்துள்ளன. முக்கியமாக திருவல்லிக்கேணி, மயிலாப்பூர் ஆகிய கோயில்களில் உள்ள கல்வெட்டுகள் வெளிவந்துள்ளது சிறப்பம்சமாகும்.

சென்னை மாநகர் பல்லவர் காலத்திலிருந்து சிறப்புற்று விளங்கியிருந்ததை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலிலுள்ள பல்லவ மன்னன் தந்திவர்மனின் 12-ஆவது ஆட்சியாண்டு (கி.பி.808) கல்வெட்டு வாயிலாக அறிய முடிகிறது. இவ்வூர் அன்றும் 'திருவல்லிக்கேணி' என்றே அழைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். திருவல்லிக்கேணி எனும் இவ்வூர் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து புலியூர்கோட்டத்து எழுமூர் நாட்டுப் பிரிவில் இருந்துள்ளதை கல்வெட்டுகள் கூறுகின்றன. இக்கோயிலில் ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து 19-ஆம் நூற்றாண்டு வரையிலான கல்வெட்டுகள் கிடைக்கின்றன.

திருப்பூம்பாவை நாயனாரையும் ஐஞ்சு வண்ண வணிகர்களைப் பற்றி குறிப்பிடும் 13-ஆம் நூற்றாண்டு கல்வெட்டு மயிலாப்பூர் விருப்பாட்சுஷீச்வரர் கோயிலில் காணப்படுகிறது.

மேலும் மயிலாப்பூர், தண்டையார்பேட்டை, அயனாவரம், எழும்பூர், புலியூர், சைதாப்பேட்டை, ஆலந்தூர், சாந்தோம் போன்ற பகுதிகளில் உள்ள கல்வெட்டுகள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன.

இதனிடையே தொல்லியல் மற்றும் வரலாற்று ஆர்வலர்களிடையே மிகவும் வரவேற்பினைப் பெற்றுள்ள இத்துறையின் நூல்கள் மறுப்பதிப்பு செய்யும் பணியினையும் மேற்கொண்டு வருகிறது. சென்னை நகரம் ஆரம்பிக்கப்பட்டு 370 ஆண்டுகள் ஆகிறது. 370 ஆண்டு கால வரலாற்றுச் சிறப்புப் பெற்ற சென்னையில் உள்ள கல்வெட்டுகளைப் பற்றி இன்றைய இளம் தலைமுறையினரும் தொல்லியல் மற்றும் வரலாற்று ஆர்வலர்களும், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களும் அறிந்துக் கொள்ளும் வகையில் இந்நூலை இரண்டாம் பதிப்பாக வெளியிடுவதில் இத்துறை பெருமை கொள்கிறது.

இந்நூலின் பதிப்பாசிரியர் முனைவர் இரா. நாகசாமி அவர்கள் இக்கல்வெட்டுகளை அனைவரும் அறிந்திடும் வகையில் சிறப்புற எழுதியுள்ளமை சிறப்பாகும். அவருக்கு எனது உளங்கனிந்த பாராட்டுகள், இந்நூலின் மறுபதிப்பு பணியில் ஈடுபட்டு, இந்நூலினை சிறப்புற வெளிக்கொணர்ந்த கல்வெட்டாய்வாளர்கள் திரு. கி.சு.சம்பத், திரு. இரா.சிவானந்தம் ஆகியோருக்கு எனது பாராட்டுகள். இந்நூலிற்கான அட்டைப்படம் வடிவமைத்த திரு. மு.த.ஸ்ரீதரன் மற்றும் தேவையான பணிகளை மேற்கொண்ட அச்சுப்பிரிவு பணியாளர்களுக்கும் எனது பாராட்டுகள்.

மேலும் துறையில் வெளியிடப்பட்ட நூல்களை மீண்டும் வெளிக்கொணரும் வகையில் மறுப்பதிப்பு செய்வதற்கு நிதியுதவி அளித்திட்ட தமிழ்நாடு அரசுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் தொல்லியல் மற்றும் வரலாற்று ஆய்வறிஞர்கள் மற்றும் பள்ளி. கல்லூரி மாணவ, மாணவியர்கள், பொதுமக்கள் என அனைத்துத் தரப்பினரும் படித்து பயன்பெற வேண்டும் என்பது என் அவா.

(தி.ஸ்ரீ.ஸ்ரீதர்,)

முன்னுரை

தமிழ் நாட்டிலுள்ள கல்வெட்டுகள் அனைத்தையும் படியெடுத்து அச்சிடவேண்டும் என்ற திட்டத்தின்படி இத்துறை செயலாற்றி வருகிறது. ஏற்கனவே சுமார் 25000 க்கும் மேற்பட்ட கல்வெட்டுகளை மத்திய அரசு கல்வெட்டுப் பிரிவு படியெடுத்து அவை அனைத்துக்கும் சிறு குறிப்புகளை ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ளனர். சுமார் 6000 கல்வெட்டுகள் முழுமையாக அச்சிடப்பட்டுள்ளன. இவை தவிர படியெடுக்க வேண்டிய கல்வெட்டுகள் இன்னும் பல்லாயிரம் இருக்கின்றன. மாவட்டம் மாவட்டமாக ஊர் ஊராக ஆய்ந்து, படியெடுத்து அச்சிடவேண்டும் என்பது தமிழக அரசின் நோக்கம். சென்னை மாநகரிலுள்ள கல்வெட்டுகள் மட்டும் எவ்வளவு எனக் கண்டறிய ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. ஏற்கனவே படியெடுத்த கல்வெட்டுகள் போக சுமார் 200 கல்வெட்டுகள் புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்டன. இவை பெரும்பாலும் துண்டுக் கல்வெட்டுகளாக இருந்த போதிலும் சென்னையின் வரலாற்றுக்குப் பல அரும் செய்திகளை வழங்குகின்றன. கி. பி. 1900 வரையில் எழுதப்பட்ட கல்வெட்டுகள் அனைத்தும் படியெடுக்கப்பட்டு இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. வடமொழிச் சொற்கள் வரும் இடங்களில் கீழே தமிழ் வடிவம் குறிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே அச்சிடப்பட்டவைகளுக்கு முன் பதிப்புக் குறிப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையால் படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகளுக்குத் தனித்ததொரு தொடர் எண் கொடுக்கப்பட்டுள்ளது. படியெடுக்கப்பட்ட ஆண்டு முதலில் குறிக்கப்படுகிறது. பின்னர் கல்வெட்டின் எண் கொடுக்கப்பட்டுள்ளது. கல்வெட்டின் எழுத்து, மொழி, அரசு, வரலாற்று ஆண்டு, குறிப்புரை முதலியன இடம் பெறுகின்றன.

கல்வெட்டுகளை அன்று இத்துறையில் பணியாற்றிய கல்வெட்டு ஆய்வாளர்கள் திரு. சி. ஜே. அமலநாதன், திரு. எம். டி. சம்பத், திரு. எஸ். பொன்னுசாமி ஆகியோர் படியெடுத்து, படித்து உதவினர். அவர்களுக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். இவற்றைப் பிழை திருத்தி, அச்சிட இத்துறை கல்வெட்டாய்வாளர் திரு நடன. காசிநாதன் உதவியிருக்கிறார். பலமொழிக் கல்வெட்டுகளையும் இத்துறை அச்சுப் பிரிவினர் திறனோடு அச்சுக்கோர்த்து அச்சிட்டுள்ளனர். இருப்பினும் இந்நூலில் ஒரு சில பிழைகள் இருத்தல் கூடும். அவற்றை இத்துறையின் கவனத்

துக்குக் கொண்டு வந்தால் பிழை திருத்த வகை செய்யப்படும். கன்னிமாரா பொது நூல் நிலையம், சென்னைப் பல்கலைக் கழக நூல் நிலையம், அரசு ஆவண காப்பகம் முதலிய நூலகங்கள் இந்நூலை அச்சிடுவதற்கும் ஆய்வதற்கும் தேவையான நூல்களை அன்போடு அளித்து உதவியமைக்கு எமது நன்றி.

இத்திட்டத்தை உருவாக்கி, இந்நூல் அச்சிடுவதில் பல வழிகளிலும் அறிவுரை நல்கிய உயர்திரு. சா. கணேசன், எம். எல். சி., அவர்களுக்கு உளமார்ந்த நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

தமிழகக் கல்வெட்டுகளை விரைவில் அச்சிட வேண்டிய ஊக்கம் அளித்து எம்மை இப்பணியில் ஈடுபடுத்திப் பணித்து வரும் தமிழ்நாடு அரசு கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு நாவலர். இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு இத்துறை என்றென்றும் கடமைப்பட்டுள்ளது.

இங்ஙனம்,
இரா. நாகசாமி

உள்ளடக்கம்

வ.எண்.		பக்கம்
1.	திருவல்லிக்கேணி	1
2.	மயிலாப்பூர்	104
3.	தண்டையார்பேட்டை	197
4.	கொருக்குப்பேட்டை	203
5.	அயனாவரம்	204
6.	புரசைவாக்கம்	208
7.	தாக்கர்சத்திரம்	213
8.	முத்தியால்பேட்டை	215
9.	பெரம்பூர்	218
10.	அமைந்தகரை	224
11.	எழும்பூர்	226
12.	நுங்கம்பாக்கம்	233
13.	கிருஷ்ணாம்பேட்டை	239
14.	சிந்தாதிரிப்பேட்டை	241
15.	புலியூர்	245
16.	சைதாப்பேட்டை	249
17.	சேத்துப்பட்டு	256
18.	ஈக்காட்டுத்தாங்கல்	257
19	கொசப்பேட்டை	258
20.	வேப்பேரி	259
21.	சூளை	260
22.	அடையாறு	267
23.	ஆலந்தூர்	271
24.	மேற்கு சி.ஐ.டி. நகர்	275
25.	பார்க் டவுன் (பூங்கா நகர்)	279
26.	ஜார்ஜ் டவுன்	287
27.	தங்க சாலை	293
28.	இராயபுரம்	294
29.	பழையவண்ணாரப்பேட்டை	298
30.	சோமாலீசுவரன்பேட்டை	300
31.	சாந்தோம்	303

மாவட்டம் : சென்னை		வட்டம்	: தென் சென்னை
ஊர்	: திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்	1
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை	234 of 1903	முன் பதிப்பு	: Epigraphia Indica Volume VIII, p. 290
எழுத்து	: கிரந்தமும் தமிழும்	மொழி	: தமிழ்
அரசு	: பல்லவர்	மன்னன்	: தந்திவர்மர்
ஆட்சி ஆண்டு	: 12-ஆம் ஆண்டு	வரலாற்று ஆண்டு	: கி. பி. 808

இடம் : பார்த்தசாரதி கோயிலின் கருவறையின் நுழைவாயிலின் வடபால் ஒரு கல்லில் உள்ளது.

குறிப்புரை : இக்கல்வெட்டு பல்லவ மன்னன் தந்திவர்மனின் பன்னிரண்டாம் ஆட்சி ஆண்டைச் சார்ந்தது. திருவல்லிக்கேணியைச் சேர்ந்த குலங்கிழார்கள் கருமாரச்சேரிப் புலத்தை அடகு வைத்தனர். அதற்கு நாற்பத்தைந்து காடி நெல் வட்டியும் அளிக்கவே, கோயிலில் திருஅமுது படைக்க முடியாமல் போயிற்று. புகழ்த்துணை விசையரயன் என்பான் முப்பது காடி நெல்லும் ஐந்து கழஞ்சு பொன்னும் கொடுத்து அந்நிலத்தை மீட்டுத் தனதாக்கிக் கொண்டான். அந்நிலத்திலிருந்து நாற்பத்தைந்து காடி நெல்லுக்கு ஒவ்வொரு நாளும் இருநாழி தூய்மையான குத்தலரிசி பெற்று சங்கசர்மன், சட்டிசர்மன், இளைய சட்டிசர்மன் என்பார்கள் இரவு போனகம் கோயிலில் படைத்து வரலானார்கள். அவ்வாறு படைக்கத் தவறினால் அவிப் புறத்தும், அவரவர் புலத்தும் காரைகிழான் புலத்து இருந்தும் சுவாமி போகத்துக்குக் கொடுத்த திருவமுர்து காட்டவேண்டும். ஈழ விளக்கு ஒன்றும், வட்டில் ஒன்றும், லோகப்பானை ஒன்றும் கோயிலுக்குக் கொடுக்கப்பட்டது.

கல்வெட்டு

1 ஸ்வஸ்தி ஸ்ரீ பல்லவ குலதிலக [பா]ர[1]

2 த்வாஜ கோத்ராலங்கா[ர]பதியாகிய ஸ்ரீ[2]

3 தந்திவர்ம மஹாராஜர்[க்]கு வர்ஷவர்த்தந[3]

(திருப்பவும்)

---

1. ஸ்வஸ்தி ஸ்ரீ பல்லவ குலதிலக பார
2. த்வாஜ கோத்ராலங்கார பதியாகிய ஸ்ரீ
3. தந்திவர்ம மஹாராஜர்க்கு வர்ஷவர்த்தந

4 ம் யாண்டு பன்னிரண்டாவது திருவல்லி
5 க்கேணி குலங்கிழார்கள் [க]ருமாரச்சேரிப் புலம்
6 ஒற்றி இட்டு நாற்பத்தைங் காடி நெல் பொலி ஊட்ட திரு
7 வடிகட்கு திருவாராதனை முட்டப் புகழ்த்துணைவிசை
8 யரயன் முப்பதின் காடி நெல்லும் அஞ்கழஞ்சு
9 பொன்னுங் குடுத்து மீட்டுத் தனதாக்கி நாற்பத்
10 தைங் காடியுந் நிசதி அஞ்ஞாழி நெல்லா விருந்நா
11 ழி தூக்குத்தலரிசியா விராப் போனகஞ் சங்கபஊ
12 ஷனுஞ் சட்டிபஊஷனும் இளையசட்டிபஊஷனுங் கா
13 ட்டுவாரான்[ர்]கள் முட்டில் [வ]லிப்புலத்துந் தத்தன் புல
14 த்துங் காரைகிழான் புலத்தும் ஸ்ரீஹோமத்துட் டிருவ
15 ாராதனை காட்டுவோமானோம் இக்ஷேத்ரத்துள்ளார் யாவ
16 ரேனுங் கோச்சேவது செயிது செலுத்த வொட்டி குடுத்
17 தோம் ஏழுவிளக்கும் வட்டி லோஹப்பானையும் ரக்ஷிப்ப
18 து புகழ்த்துணை விசையரையன் க்ஷேத்ரம் இது இதனை ர
19 க்ஷித்தாரடி இரண்டும் என் முடிமேலின ஸ்ரீ||-

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்		2
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை		—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	19-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயிலில் அம்மன் சன்னிதியின் முன் உள்ள மண்டபத் தூண் ஒன்றில் ஒரு சிலைக்குக் கீழே பொறிக்கப்பட்டுள்ளது.

குறிப்புரை :

கல்வெட்டு :

1 நெயிதவாயல் ஞுருயண
2 பிள்ளை
3 பேரபிள்
4 ளையா
5 கிய அண்ணுசாமி பிள்ளை
6 குமாரத்தியாயும் தொ. வெ
7 ங்கட்டஞுருயண பிள்ளை
8 பாரியை
9 யாகிய(ய)யி
10 தருற கன
11 கவல்லி அம்மாள் கயி
12 ங்கரியம்

மாவட்டம் : சென்னை
ஊர் : திருவல்லிக்கேணி
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
எழுத்து : தமிழ்
அரசு : —
ஆட்சி ஆண்டு : —

வட்டம் : தென் சென்னை
ஊர்க் கல்வெட்டு எண் : 3
முன் பதிப்பு : —
மொழி : தமிழ்
மன்னன் : —
வரலாற்று ஆண்டு : கலி ஆண்டு 4902
சக ,, 1723
கி. பி. 1801

இடம் : பார்த்தசாரதி கோயிலின் உட்சுற்றில் அமைந்துள்ள சமையலறையின் நுழை வாயிலின் மேல் உள்ள சுவரில் உள்ளது.

குறிப்புரை : தொண்டை மண்டலம், ஞயறு நாடு, புழல் கோட்டம், பொன்னேரி சீர்மையைச் சார்ந்த நெயிதவாயல் திருவமுடையா பிள்ளை மகன் நாராயண பிள்ளை ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி சன்னிதியில் திருமடப்பள்ளி கைங்கர்யம் செய்வித்ததை இக்கல்வெட்டு குறிக்கிறது.

கல்வெட்டு :

1 சொஸ்தி ஸ்ரீ விசையாற்ப்புதைய சாலிவாகன சகாப்
2 தம் ௲ ௭௱௨௰௩ கலியாப்த ௲ ௪ ௯௱௨ பிற
3 பவாதி செதாப்த ௲ ௫௰௪ ன் மேல் செல்லா
4 நின்ற துற்மதி ௲ சித்திரை மீ ௰௩ உ வி
5 யாழக் கிழமை பூறுவ பக்ஷம் தெசமி ஞாழிகை ௪௰
6 உ௯ மகம் ஞா² ௪௰ள ½³ தைதுலம் ஞா² ௰௧ விறுத்தி ஞா²
7 ௫௰௨ ½³ திவி ஞா² ௰௫ யிப்பேர்ப்பட்ட சுப தினத்தில் செ
8 யங்கொண்ட தொண்ட மண்டலத்தில் ஞய

(திருப்பவும்)

9 று ஞடு பிழல் கோட்டத்தில் போன்யேரி சிர்
10 மையில் நெயிதவாயலிலிருக்குமனந்த
11 ர் கொல திலகரில் திருவமுடையா பிள்ளை
12 குமாரன் ஞருயணபிள்ளை திருவல்லிக்கே
13 ணியிலிருக்கும் அகிலாண்டகோடி பிற
14 மாண்ட ஞயகருகிய ஸ்ரீ பாற்தசாரதி சுவாமி
15 சன்னதியில் திருமடப்பளி கயிங்கரிய
16 ம் செயிவிச்சது ஸ்ரீ பாற்தசாரதி சுவாமி
17 கள் திருவடிகளே சறணம் சுபமஸ்த்து

---

1. 'விஞ' என்பதை விஞடி என்று படிக்கவும்.
2. 'ஞ' என்பதை நாழி என்று படிக்கவும்.

$\frac{1}{2}$ என்னும் எண் ஒரு குறியீட்டால் குறிக்கப்பட்டுள்ளது.

தொடர் எண் : 1967/4

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்	:	4
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	சக ஆண்டு 1764 கி. பி. 1842

இடம் : பார்த்தசாரதி கோயிலின் கிழக்கு நுழை வாயிலின் அருகில் உள்ள கல்லில் உள்ளது.

குறிப்புரை : திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி கோயிலில் தேசாந்திரிகளுக்கு உணவுவழங்குவதற்கும் இந்து பிள்ளைகளுக்கு இந்நாட்டு சாத்திரங்களையும் ஆங்கில மொழியையும் கற்பிப்பதற்கும் பச்சையப்ப முதலியார் ஒரு லக்ஷம் வராகன் பணம் அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ௳

2 திருவல்லிக்கேணி

3 காஞ்சீபுரம் பச்சையப்ப முதலியாருடைய த

4 ர்மம் சகலருக்கும் பிரசித்தமாகத் தெரியும் பொ

5 ருட்டும் நிரந்தரமான ஞாபகத்தின் பொருட்டுஞ்

6 செய்யும் விளம்பரமாவது --

7 இறந்துபோன புண்ணிய புருஷராகிய

8 மேற்படி பச்சையப்ப முதலியாரவர்களாலே

9 வைக்கப்பட்டிருக்கும் லக்ஷம் வராகனுக்கு வ

ரப்பட்ட வட்டிப் பணத்தில் நின்றும் திருவல்லிக்
கேணியில் ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி சன்னிதியி
ல் தேசாந்தரி தளிகைத் தர்மமானது கனம்
பொருந்திய சூப்ரீம் கோர்ட்டுக் கவர்ன்மெண்டு
அதிகாரிகளால் தர்ம விசாரணைக் கர்த்தர்க
ளாக நியமிக்கப்பட்டுச் சென்ன பட்டணத்தி
லிருக்கும் இந்து சபையாரவர்களுடைய உ
த்தரவின்படி சாலிவான சகாப்தம் — ௲௭௱
௬௰௪ க்குச் சரியான சுபகிருது ௵ முதல் வருஷம்
௧ ௫[1] — ௱௨௰ வராகன் செலவுள்ளதாக நடந்து வரு
கின்றது — மேற்படி மூலதனம் கனம் பொருந்தி
ய சூப்ரீம் கோர்ட்டு அதிகாரிகளுடைய உத்த
ரவின்படி சென்னபட்டணத்திலிருக்கும் ஜெ
ன(ர)ல் திரேசரியென்னும் கவர்ன்மெண்டாரு
டைய பொக்கிஷத்தில் வைக்கப்பட்டிருக்கின்
றது ஷெ தர்மம் கிரமமாக நடவாவிட்டால் தர்
மத்தில் சரத்தையுள்ளவர்கள் ஷெ சபையாரவர்
களுக்குத் தெரியப்படுத்த வேண்டுவது
மேற்படி லக்ஷம் வராகன் போக மற்ற
மிகுதிப் பணத்துக்கு வரப்பட்ட வட்டியில் அனு
கூலமாகும்போது ஷெ இடத்தில் இந்து பிள்
ளைகளுக்கு இந்த தேசத்தில் வழங்கா நின்ற
விவகார சாஸ்திரங்கள் கற்பிக்கிறதற்கு மீ ௧ ௫[2]
௰ வராகன் சம்பளத்தில் ஒரு பண்டிதரையும்
இங்கிலீஷ் பாஷை கற்பிக்கிறதற்கு ௫ வராக
ன் சம்பளத்தில் ஒரு உபாத்தியாயரையும் நி
யமித்து வித்தியாசாலை யேற்படுத்தப்படும்

1. 'க்கு' என்று படிக்கவும்.
2. 'மாதம் ஒன்றுக்கு' என்று படிக்கவும்.

தொடர் எண் : 1967/5

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்		5
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை		—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	பாண்டியர்	மன்னன்	:	விக்கிரம பா[ண்டியன்]
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	சுமார் கி.பி. 14 ஆம் நூற்றாண்டு.

இடம் : பார்த்தசாரதி கோயிலின் உட்பிரகாரத்தின் வடக்குப் பக்கத்தில் உள்ள ஒரு கல்லில் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டின் ஒரு பகுதியே கிடைத்துள்ளது. இராமநாதீசரமு[டைய] நாயஞர்க்குக் கொடை அளித்ததைக் குறிப்பதாகத் தெரிகிறது.

கல்வெட்டு :

1 . த்திகள் ஸ்ரீ விக்கிரம பா ..
2 . ாமணரோம் இக்கோயிற் ..
3 . ாயஞர் இராமநாதீசுரமு ..
4 . க்கொண்டு இதுக்கு இர ..
5 . ம் பதினைஞ்சுக்கும் பலி ..
6 . ரை செலுத்தக் கட டு ..

தொடர் எண் : 1967/6

மாவட்டம்	: — சென்னை.	வட்டம்	: தென் சென்னை
ஊர்	: — திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்	6
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—	முன் பதிப்பு	—
எழுத்து	: — தமிழ்	மொழி	: தமிழ்
அரசு	: —	மன்னன்	: —
ஆட்சி ஆண்டு	: —	வரலாற்று ஆண்டு	: சுமார் கி.பி. 14 ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயிலின் உள்சுற்றின் வடக்குப் பக்கத்தில் உள்ள கல்லில் உள்ளது.

குறிப்புரை : பஞ்சநெதிவாணன் நீலகங்கரையன் என்பவனால் அளிக்கப்பட்ட கொடையைக் குறிக்கிறது. இருவேறு கல்வெட்டுகளின் பகுதிகள் உள்ளன. 5-ஆம் வரி வேறொரு கல்வெட்டினதாகத் தெரிகிறது.

கல்வெட்டு :

1 . பரம பஞ்சநெதிவாணன் நீலகங்கரை . .
2 . ாயில் தானத்தார்க்கேற் கடமை குடிமை . .
3 . ளிட்ட புறக்கலவகை கடமையும் உட்பட்ட . .
4 . பஞ்சநெதிவாண நீலகங்கரையன் திரு விண்ண . .

5 . வத்திகளான பெருமாள் [வி] . . .

தொடர் எண் : 1967/7

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்		7
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை		—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	சோழர்	மன்னன்	:	வீரராஜேந்திரன்
			வரலாற்று ஆண்டு	:	கி. பி. 13-ஆம் நூற்றாண்டு
ஆட்சி ஆண்டு	:	—			

இடம் : பார்த்தசாரதி கோயிலின் உள்சுற்றின் வடக்குப் பக்கத்தில் உள்ள ஒரு கல்லில் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டின் ஒரு பகுதியே கிடைத்துள்ளது.

கல்வெட்டு :

1 . திகள் ஸ்ரீவீ[ர]ராஜேந்த்ரசோழதே . .
2 . உஸமியும் நாயற்றுக் கிழமையு . .
3 . கள் குலோத்துங்க சோழ வ . .
4 . ணித்திருநாள் எழுந்தருள ெ . .

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்		8
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை		—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	சுமார் கி.பி. 13 ஆம் நூற்றுண்டு.

இடம் : பார்த்தசாரதி கோயிலின் மண்டபத்தில் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டின் ஒரு பகுதியே உள்ளது. ஒரு சிவன் கோயிலைச் சேர்ந்த கல்வெட்டு. குலோத்துங்கசோழ வளநாட்டிலுள்ள திருப்பாசூர் பிரிதிய ...... கநாதன் என்பான் நாயனுர்க்கு 2 மாடை வழங்க அதை காணி உடைய சிவபிராமணரில் திருச்சிற்றம்பல பட்டனும் உலகாளுடையானு ... பெற்று சந்திராத்தவரை நாயனுருக்கு விளக்கெரிப்பதாக ஓப்பி சிலாலேகை எழுதிக் கொடுத்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . . . .
2 . ன குலோத்துங்க சோழ வளநாட்டுக் கோ . .
3 . க்காட்டுக் கோட்டத்துத் திருப்பாசூர் பிரிதிய . .
4 . கநாதனேன் இந்நாயனுர்க்குச் சந்திராதித் . .
5 . ட்டமாடை உ இம்மாடை இரண்டுங் கைக்கெ . .
6 . காணி உடைய சிவபிராமணரில் . துயன்நா . .
7 . ன திரி[1] ச்சிற்றம்பலபட்டனும் உலகாளுடையானு . .
8 . ாதித்தவரை எரிப்பதாகச் சிலாலேகைப் பண்ணிக் . .

---

1. 'ரு' என்று இருக்க வேண்டும்.

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்	:	9
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 16-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயிலின் வெளிச்சுற்றின் வடக்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : மிகவும் சிதைந்து உள்ளது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ ட திருவல்லிக்கே . .
2 . இரண்டாங்காற்படையிலும் . .
3 . மயிலாப்பூர்த் தலைக் கோயதி அ . .
4 . செய்வித்த முழம் உாறியெ இ . .
5 . தன்மம்

தொடர் எண் : 1967/10

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்		10
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை		—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	கி. பி. 15-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயிலின் வெளிச் சுற்றுச் சுவரின் வடக்குப்புறம் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டின் ஒரு பகுதியே உள்ளது. கொடையளிக்கப்பட்ட நிலத்தின் நான்கு எல்லைகளைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . ஞன ஊ[ர்]க்கு ெ . .
2 . ம் தென்பாற் கெ . .
3 . ற்கெல்லைக்கும்[1] . .
4 . ட குழி எழுநூறும் . .
5 . ட்டய கைய்ய . .

---

1. 'க்' ம் 'கு' வும் இணைத்தெழுதப்பட்டுள்ளது.

தொடர் எண் : 1967/11

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்	:	11
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	கி. பி. 13-ஆம் நூற்றுண்டு

இடம் : பார்த்தசாரதி கோயிலின் வெளிச்சுற்றுச் சுவரின் தென்புறம் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டு சிதைந்து உள்ளது. நாட்டின் பிரிவான ஜயங்கொண்டசோழ மண்டலத்துப் புலியூ[ர்] என்று குறிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1 . ப்ப [வி]சைய மாமகள் வெல்புயத்திரும . .
2 . லுயிர்க்கெல்லாம் எல்லையிலின்ப மியலவும் . .
3 . வது ஜயங்கொண்டசோழ மண்டலத்துப் புலியூ . .
4 . இக்கோயிலில் நிமஙக்காறுைய் வருகிற மன்றுடி . .
5 . செலுத்தக் கடவோமாகக் கைக்கொண்ட பசு மு . .

மாவட்டம் : சென்னை

வட்டம் : தென் சென்னை

ஊர் : திருவல்லிக்கேணி

ஊர்க் கல்வெட்டு எண் : 12

இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —

முன் பதிப்பு : —

எழுத்து : தமிழ்

மொழி : தமிழ்

அரசு : —

மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —

வரலாற்று ஆண்டு : சுமார் கி. பி. 13-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயிலின் வெளிச்சுற்றுச் சுவரின் தென்புறம் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டின் ஒரு பகுதியே உள்ளது. முதல்வரி சிதைந்துள்ளது. கொடையளிக்கப்பட்ட நிலத்தின் எல்லைகளைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . லை பழந்தம் தென் மேலைமூலை மேல்ச்சறுதி .
2 . ங்கிச் செவிதாக வடக்கு நோக்கிப் போய்க் கலிச்சி .
3 . நட்ட திருச்சூல கல்லுக்கு தெற்கும் இன்னும் அடை .
4 . லைக்கு விட்ட நீர்நிலமும் கொல்லைநிலமும் நத் .
5 . ஞோக்கின கிணறும் உட்பட இவ்வூர் அடங்கலு .
6 . ட்டமான விக்கிரமசோழ வளநாட்டுத் து[டர்]முள்ளி .
7 . ராயற்க்குக் காணி ஆக நாங்கள் விற்றுக் குடுத்து இ .
8 ...... கொண்டு இக்கோட்டு[ர்] .....

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்		13
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை		—	முன் பதிப்பு		—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	சுமார் கி.பி. 16 ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயிலின் வெளிச்சுற்றுச் சுவரின் தென்புறத்தில் ஒரு கல்லில் உள்ளது.

குறிப்புரை : மிகவும் சிதைந்த நிலையில் உள்ளது.

கல்வெட்டு :

1 . கன்னுக்கு அந்திச் சந்தி கருர் தா
2 . தந் காதலிக்க நிந்ருகவிட . .
3 . ன சந்தாதரப் பெருமா[ள்] .
4 . டுயண்ண யோறப்பட்டு எரி .
5 . ன கடவதே . .

மாவட்டம்	:	சென்னை	வட்டம்		தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்		14
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை		—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	கிரந்தம்	மொழி	:	சமஸ்கிருதம்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	சுமார் கி.பி. 13-14-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயில், மணவாளமாமுனி சன்னதியின் தெற்குச்சுவர். (உட் பக்கம்)

குறிப்புரை : கல்வெட்டின் ஒரு பகுதியே உள்ளது.

கல்வெட்டு :

1 ஹரி : ப்ராஜ்ஞா[ம்]மநா . .

2 ப்ரஷ்டி வாமீஸ்வர . .

தொடர் எண் : 1967/15

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்	:	15
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	சோழர்	மன்னன்	:	மூன்றும் குலோத்துங்கன்
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயிலின் வெளிச் சுற்றின் தரையில் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டின் ஒரு பகுதியே உள்ளது. மூன்றும் குலோத்துங்கனின் மெய்க்கீர்த்தியையும், ஒரு சந்தி விளக்குக்கு அளித்த கொடையையும் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . [ர]யு மீழமுங் கருவூரும் . .
2 . தான் சம்பந்த கடக்க . .
3 . ாயன் வைய்த்த சந்தி வி . .
4 . டா நாயகஞ் செய்வாந் ன . .
5 . கணக்கொன் ஆச்ச . .
6 . கு பத்துக்கும் அருமொழி . .

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்		16
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை		—	முன் பதிப்பு		—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	சுமார் கி.பி. 13-16ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயிலின் வெளிச்சுற்றுத் தரையில் உள்ளது.

குறிப்புரை : இரண்டு கல்வெட்டுகளின் பகுதிகள் உள்ளன. முதல் மூன்று வரிகள் காலத்தால் முற்பட்டவை. மற்ற இரண்டு வரிகளும் பிற்காலத்தில் பொறிக்கப்பட்டவை.

கல்வெட்டு :

1 . நாருடைய நா . .
2 . க திருவீதியில் எ .
3 . பா சிவனேன் இ . .
4 . ாவத்தி[லே போ] .
5 . துப் . ாமயும் . .

தொடர் எண் : 1967/17

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்	:	17
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	சுமார் கி. பி. 14-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயிலின் வெளிச்சுற்றின் தரையில் உள்ளது.

குறிப்புரை : கொடையளிக்கப்பட்ட நிலங்களின் எல்லைகளைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . த இறை இழிச்சி ஊர் . .
2 . ாருக் கீழ்பாற் கெல்லை தன . .
3 . பாற்கெல்லை [காடு]கொ . .
4 . கச் செறுவுக்கு தெற்கும் இ . .
5 . இன்நிலம் இரண்டும் . .

தொடர் எண் : 1967/18

மாவட்டம்	: சென்னை	வட்டம்	: தென் சென்னை
ஊர்	: திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்	18
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—	முன் பதிப்பு	—
எழுத்து	: தமிழ்	மொழி	: தமிழ்
அரசு	: —	மன்னன்	: —
ஆட்சி ஆண்டு	: —	வரலாற்று ஆண்டு	: சுமார் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயிலின் வெளிச் சுற்றின் தரையில் உள்ளது.

குறிப்புரை : மிகவும் சிதைந்து உள்ளது

கல்வெட்டு :

1 . மணயிலெ சநாதித் . .
2 . ளப்படி இத்தன்மத்த . .
3 . வஞைகவும் கெங்கை . .
4 . மகன் கருவைத்தோ[ன்] .

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்	:	19
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	சோழர்	மன்னன்	:	மூன்றாம் குலோத்துங்கன்?
ஆட்சி ஆண்டு	:	22-ஆம் ஆண்டு	வரலாற்று ஆண்டு	:	சுமார் கி.பி. 1200

இடம் : பார்த்தசாரதி கோயிலின் இரண்டாம் சுற்றில் ஒரு கல்லில் உள்ளது.

குறிப்புரை : இது ஒரு சிவன் கோயிலைச் சேர்ந்த கல்வெட்டு. ஒரு பகுதியே உள்ளது. தேவரடியாள் ஒருத்தி சிறுகாலைச் சந்தியின்போது நாயனார் கோவிலில் ஆவின் ஐந்து ஆடி அருளுவதற்காகக் கொடுத்த கொடையைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . ஸ்வஸ்தி ஸ்ரீ த்ரிபுவனச்சக்ரவத்தி[1]கள் ம . .
2 . சோழ தேவற்கு யாண்டு உ௰உ ஆவ . .
3 . நாயநார் கோயிலில் தேவர் அடியாள் . .
4 . ண்டலத்து புலியூர் கோட்டத்து ெ . .
5 . கவ்யம்[2] சிறுகாலைச் சந்தியிலே ஆடி அரு . .
6 . ளும் கலசம் ஒன்றுங் கால் ஐந் . .
7 . ஞ்சகவ்யம்[3] ஆடி அருளுவ . .
8 . ணித்தோம் இத்தஹ்மம்[4] பன்மாஹே . .

---

1. 'த்' ம் 'தி' யும் இணைத்தெழுதப் பட்டுள்ளது.
2. கவ்யம்.
3. பஞ்ச கவ்யம்.
4. இத்தஹ்மம். 'ஹ்' ம் 'ம' வும் இணைத்தெழுதப் பட்டுள்ளது.

மாவட்டம்	: சென்னை		வட்டம்	:	தென் சென்னை
ஊர்	: திருவல்லிக்கேணி		ஊர்க் கல்வெட்டு எண்		20
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை		—	முன் பதிப்பு	:	—
எழுத்து	: தமிழ்		மொழி	:	தமிழ்
அரசு	: சோழர்		மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	: —		வரலாற்று ஆண்டு	:	கி. பி. 13-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயிலின் வெளிச் சுற்றின் தரையில் உள்ளது.

குறிப்புரை : இது திரிசூலம் சிவன் கோயில் கல்வெட்டாக இருக்கலாம். கல்வெட்டின் ஒரு பகுதியே உள்ளது. சபா ஒன்றினால் திரிச்சுரமுடைய மஹாதேவர்க்கு நீர் வரி, அந்தராயம் ஆகிய வரிகள் தவிர்த்து கொடுக்கப்பட்ட நிலக்கொடையைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . கொண்ட சோழமண்டலத்துக் குலோத் . .
2 . ஸெயோம் எங்களூரிற் திரிச்சுரமுடைய உஹா . .
3 . ப் பாறைவதிக்குக் கிழக்கு[ம்] பெருவாய்க்காலுக்குத் தெற் .
4 . யில் மேற்கடையவும் பதிந் எண் சாண் கோலா . .
5 . நிர்விலே அஞராயமுஞவி[ர்]ந்து [1] இத்நிலஙிருப்படி யாற்[று] . .
6 . மாவது எங்களூர் பெ்ருமதகு காற்போக்கில் நடுவில் திட . .
7 . க்கிப் போந வதிக்கு வடக்கும் வடபாற் கெல்லே கிழக் . .
8 . ற்றுக் குடலாக விட்டோம் [ஸஸெயோம்] . .

---

1. 'ந்' நும் 'து' வும் இணைத்தெழுதப் பட்டுள்ளது.

மாவட்டம் : சென்னை
வட்டம் : தென் சென்னை
ஊர் : திருவல்லிக்கேணி
ஊர்க் கல்வெட்டு எண் : 21
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
எழுத்து : தமிழ்
மொழி : தமிழ்
அரசு : சோழர்
மன்னன் : இரண்டாம் இராஜேந்திரதேவர்
ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : கி. பி. 12-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயில், மணவாள மாமுனி சன்னதியின் தெற்குப் பக்கச் சுவர்.

குறிப்புரை : மருதுழான் உலகாளுடையான் என்பவன் நிவந்தமாக ஒன்றரை மாடை கொடை அளித்ததைக் குறிக்கிறது. கல்வெட்டின் ஒரு பகுதியே உள்ளது. கல்வெட்டின் முன்னர் ஒரு குத்து விளக்கின் படம் வரையப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ ரா[ஜேஙர] தேவர்க்கு . . . .
2 மருதுழான் உலகாள் உடையா[ள]. . . .
3 கு மாடை ஒன்றரையும் கைக்கொ . . .
4 ய் வெண்ணைக் கூத்தபட்டனென் . . .

தொடர் எண் : 1967/22

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்		22
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை		—	முன் பதிப்பு		—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு		—	வரலாற்று ஆண்டு	:	சுமார் கி.பி. 16-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயிலின் உள் சுற்றில் தரையில் உள்ளது.

குறிப்புரை : மிகவும் சிதைந்து உள்ளது

கல்வெட்டு :

1 . . . க்க . . கதாய . .
2 . . . [ன]தற் . .
3 . த்தார் இன்னுயநார் தேவதாந . .
4 . து காணி நிலமும் . .
5 . இன்னிலத்துக்கு வந்த . .

தொடர் எண் : 1967/23

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்		23
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை		—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	சுமார் கி.பி. 13-ஆம் நூற்றாண்டு

இடம் பார்த்தசாரதி கோயிலில் உள் சுற்றின் தரையில் ஒரு கல்லில் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டின் ஒரு பகுதியே கிடைத்துள்ளது. கலசத்துக்குச் சுற்றும் வரி நாலுக்கும் ஸ்ரீபலிக்கும் திருவமுதுக்கும் அளித்த கொடையைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . ட்டதுக்கு பொன்காலும் [தீதுமாடுகிற]வன்று பெருந்திருவமிர்து . .

2 . கலசம் வரிய்னாலுக்கும் ஆக பொன் இரண்டு மஞ்சாடியும் ஸ்ரீபலி இட . .

3 . [மி]ர்து நாழிக்கு நெல்லு இருநாழியும் அடைக்காய் அமிர்துக்கு பாக்கு இரண்டு . .

4 . ருங்குடி பிளப்புக்கு [டி வேளான்] திருக்காவணம் இடுவதாகவும் இப் . .

தொடர் எண் : 1967/24

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்	:	24
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	:	30-ஆம் ஆண்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயிலின் உள் சுற்றில் தரையில் ஒரு கல்லில் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டு பகுதியே கிடைத்துள்ளது.

கல்வெட்டு :

1 . கா தேவற்க்கு யாண்டு ௩௰ . .
2 . மூந்நா . . ஜயங்கொண்ட சோழ . .
3 . கோட்டூர் நாட்டு திருவான்மியூர் . .
4 . [கயல் வடக்] கடய சோழ மண்டல . .
5 . தனூர் [நாட்டுக்] கிழாந் திருவம்பப் . .

தொடர் எண் : 1967/25

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்		25
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை		—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	கி. பி. 16-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயில் உள் சுற்றில் ஆண்டாள் கோயிலின் மேற்புறம் தரையில் ஒரு கல்லில் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டு பகுதியே கிடைத்துள்ளது.

கல்வெட்டு :

1 . குடுத்த . .
2 . [டு] கெ கொ . .
3 . கொண்டு . .
4 . சிலா லே[கை] . .
5 . ஈாமெஸ்வரரகைஷ [1] . .

---

1. மாகேச்வர ரகைஷ.

மாவட்டம்	: சென்னை	வட்டம்	: தென் சென்னை
ஊர்	: திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்	26
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—	முன் பதிப்பு	: —
எழுத்து	: தமிழும் கிரந்தமும்	மொழி	: தமிழ்
அரசு	: —	மன்னன்	: —
ஆட்சி ஆண்டு	:	வரலாற்று ஆண்டு	: கி. பி. 13-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயில் உள்சுற்றில் ஆண்டாள் கோயிலின் மேற்புறம் தரையில் ஒரு கல்லில் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டின் ஒரு பகுதியே உள்ளது.

கல்வெட்டு :

1 . மற்க்கு யாண்டு . .
2 . கரகுழ [1] . .
3 . நப்ரக்யாத [2] . .
4 . மாதிகாரண [3] . .
5 . ஸஹி . .
6 . ராகண . .

---

1. கரகுலம்.
2. நப்ரக்யாத.
3. மாதி காரண.

மாவட்டம்	:	சென்னை	வட்டம்		தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்	:	27
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	சுமார் கி.பி. 13-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயிலில் உள்சுற்று வடபுறம் தரையில் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டின் ஒரு பகுதியே கிடைத்துள்ளது. ஒரு சிவன் கோயில் கல்வெட்டாகக் காணப்படுகிறது.

கல்வெட்டு :

1 . க்கு [சி]லாலேகைப் பண்ணிக் கொடு .

2 . ஶ்ரா ரக்ஷெ[1] . .

---

1. ச்வர ரக்ஷை.

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்	:	28
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழும் கிரந்தமும்	மொழி	:	தமிழ்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	கி. பி. 13 அல்லது 14-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயில் உள்சுற்று வடபுறம் தரையில் உள்ள ஒரு கல்லில் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டின் ஒரு பகுதியே உள்ளது. ஒரு அரசனின் பட்டங்களைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . ஸாலங்க்ருத ஸர்மதி ர[ண] [1] . .
2 . கோஸலாதிப திலக பு [2] . .
3 . நிருபம பராக்ரம ஸகல ஜக [3] . .
4 . நீச்வர நாமாதி ஸமஸ்த ப்ரஸஸ்தி [4] . .
5 . ளை நாயனார் கோயில்த் தானத் . .

---

1. ஸாலங்க்ருத ஸர்மதி ரமண
2. கோஸலாதிப திலக பு
3. நிருபம பராக்ரம ஸகல ஜக
4. நீச்வர நாமாதி ஸமஸ்த ப்ரஸஸ்தி

தொடர் எண் : 1967/29

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்	:	29
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	கி.பி 16-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயில் திருச்சுற்றின் வடபுறம் தரையில் ஒரு கல்லில் உள்ளது.

குறிப்புரை : மிகவும் சிதைந்து உள்ளது

கல்வெட்டு :

1 . இக்கல் வெ . .
2 . . . துத . .
3 . ப் பெருமா . .
4 . இன்னிலத் . .

மாவட்டம் : சென்னை
வட்டம் : தென் சென்னை
ஊர் : திருவல்லிக்கேணி
ஊர்க் கல்வெட்டு எண் : 30
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
எழுத்து : தமிழ்
மொழி : தமிழ்
அரசு : —
மன்னன் : —
ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : கி.பி. 12-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயில் உள்சுற்றில் வடபுறம் தரையில் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டு சிதைந்துள்ளது. திருவான்மியூரைச் சேர்ந்த கல்வெட்டாகக் காணப் படுகிறது.

கல்வெட்டு :

1 . . . .
2 . த்துங்க சோழ வளநாட்டுக் கோட்டூர் நாட்டுத் திருவா . .
3 . கு ஒன்றுக்கும் விட்ட பசு ஒன்றும் நாகு மூன்றும் ஆக . .
4 . கக் கைகொண்டு சிலாலேகை செய்வித்தோம் இ[க்] . .

தொடர் எண் : 1967/31

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்	:	31
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	சுமார் கி. பி. 13-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயிலில் வரதராஜர் ஆலயத்துக்கு வடபுறம் தரையில் ஒரு கல்லில் உள்ளது.

குறிப்புரை : மிகவும் சிதைந்து உள்ளது

கல்வெட்டு :

1 . படிக்கு . .
2 . ஶியஶ்ர [1] . .
3 . ஞ்சியார் . .
4 . றை நாள் த . .
5 . விளக்கு இ . .
6 . பருமகரு . .

1. செய்ய.

தொடர் எண் : 1967/32

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்		32
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை		—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	கி.பி 13-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயில் வரதராஜர் ஆலயத்துக்கு வடபுறம் தரையில் ஒரு கல்லில் உள்ளது.

குறிப்புரை : மிகவும் சிதைந்து உள்ளது.

கல்வெட்டு :

1 . தேவர்கு யா . .
2 . லத்துப் பு . .
3 . ருடியபி . .

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்	:	33
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 15-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயில் உள்சுற்றில் வடபுறம் தரையில் ஒரு கல்லில் உள்ளது.

குறிப்புரை : மிகவும் சிதைந்து உள்ளது.

கல்வெட்டு :

1 . ணிசை புதன்[கி] . .
2 . ட்டி குற்றம் கார்த் . .
3 . ம் நாட்டு வரியும் . .
4 . காணிக்கை பெற்று . .
5 . த்தகுடி மக்கள் பெற் . .

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்	:	34
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	—	மன்னன்		—
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	சுமார் கி. பி. 13-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயில் உள் சுற்றில் வடபுறம் தரையில் ஒரு கல்லில் உள்ளது.

குறிப்புரை : இக்கல்வெட்டுப் பகுதி திருவான்மியூர்க் கோயிலைச் சேர்ந்தது. கழுமலவூரர் என்பாரிடமிருந்து பரிசாகப் பெற்ற புதிய நற்காசுகளைக் கொண்டு கோயிலுக்கு வேண்டிய நிவந்தங்களைச் செய்ததைக் குறிப்பதாகும்.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக் . .
2 ஸிங்க நாயற்று பூர்வ ப[க்ஷ] . .
3 ண்ட சோழ மண்டலத்து புலியு . .
4 ஆளுடையர் திருவாந்மியூருடை . .
5 ளைகளில் கழுமலவூரர் பக் . .
6 கொண்ட அந்றுடு நற்புதுக் கா[சு] . .
7 கச் செலுத்தக் கடவோமாக . .

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்	:	35
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	சுமார் கி. பி. 14-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயில் உள்சுற்று வடபுறம் தரையில் உள்ள ஒரு கல்லில் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டின் ஒரு பகுதியே உள்ளது. இது ஒரு சிவன் கோயிலைச் சேர்ந்த கல்வெட்டாகத் தெரிகிறது. சந்திவிளக்கு ஒன்று வைப்பதற்கு 15 பணம் கொடுக்கப் பட்டதைத் தெரிவிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்க . .
2 யிற் காணி உடைய சிவ . .
3 த்தவர் எழுந்தருளுவித்த . .
4 சைப்பை . .க்குட[ல] . .
5 ண்ட பணம் யிரு இப் பண . .
6 ந்தி விளக்கும் சந்திராதித் . .

தொடர் எண் : 1967/36

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்		36
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை		—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	சுமார் கி.பி. 13 அல்லது 14-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயில் உள் சுற்றில் வடபுறம் தரையில் ஒரு கல்லில் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டின் ஒரு பகுதியே கிடைத்துள்ளது. இது கபாலீச்சுரர் கோயிலைச் சேர்ந்ததாகக் கருதலாம்.

கல்வெட்டு :

1 . திரிபுவனச் சக் . .
2 . ா தேவற்கு யாண் . .
3 . ஆளுடையார் திருக் . .
4 . க்கு இவ்வூரி . . . குரு . .

தொடர் எண் : 1967/37

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்		37
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை		—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	கி.பி 13-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயில் உள் சுற்றில் வடபுறம் தரையில் ஒரு கல்லில் உள்ளது.

குறிப்புரை : ஒரு சிவன் கோயிலில் விளக்கு எரிப்பதற்கு நெய் கொடுப்பதற்காக ஆறு பசு கொடையாக அளிக்கப் பட்டதைக் குறிப்பதாக இருக்கலாம்.

கல்வெட்டு :

1 . க் கோட்டமுடைய[ரர்[1]]கு துலாவிய கோ . .
2 . ண்டுக்கும் விட்ட பசு ஆறுக்கு . .
3 . சிலாலேகை [ப]ண்ணிக் குடுத்தே . .
4 . ம் பன்மாஹெஸ்வரரக்ஷை . .

---

1. இவ்வெழுத்துக்கள் கல்வெட்டில் இல்லை.

தொடர் எண் : 1967/38

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்		38
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை		—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	பாண்டியர்	மன்னன்	:	[சுந்த]ர பாண்டியன் ?
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	கி. பி. 13 அல்லது 14-ஆம் நூற்றுண்டு

இடம் : பார்த்தசாரதி கோயிலின் உள் சுற்றில் வடபுறத் தரையில் ஒரு கல்லில் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டு மிகவும் சிதைந்துள்ளது.

கல்வெட்டு :

1 . . . நாஞ் . . கொண்டு . .
2 . வஞர் . . [உ]ா . . . .
3 . ப்பதெ முக்காலும் மனை . .
4 . ர பாண்டிய தேவற்கு . .
5 . ந்த இறை [சு]ா நாகன் . .

தொடர் எண் : 1967/39

மாவட்டம் :	சென்னை	வட்டம் :	தென் சென்னை
ஊர் :	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண் :	39
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை :	—	முன் பதிப்பு :	—
எழுத்து :	தமிழ்	மொழி :	தமிழ்
அரசு :	—	மன்னன் :	—
ஆட்சி ஆண்டு :	—	வரலாற்று ஆண்டு :	சுமார் கி. பி. 13-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயில் உள்சுற்று வடபுறம் தரையில் உள்ள ஒரு கல்லில் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டின் சிறு பகுதியே உள்ளது.

கல்வெட்டு :

1 . லம் மூன்று வேலியும் . .
2 . [ரு]ளின திருமுகப்படியே . .
3 . [நி]லவாவனவும் இக் செ . .

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்		40
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை		—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	சுமார் கி. பி. 13-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயில் உள் சுற்றில் தென்புறம் தரை மேல் ஒரு கல்லில் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டின் பகுதியே உள்ளது.

கல்வெட்டு :

1 . . மண்டலத்துக் கோட்டூர் நா . .
2 . . சந்திராதித்த வரை செல்லக் . .
3 . . லோத்துங்க சோழக் காங்கே . .
4 . . டைச் சித்திரை மா[த[1]]த்து விட்ட . .
5 . . ன்றும் இன்னுயனார்க்குச் சந்திர[ர] . .

---

1. இவ்வெழுத்து கல்வெட்டில் இல்லை.

தொடர் எண் : 1967/41

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்		41
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை		—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	சுமார் கி.பி. 16-ஆம் நூற்றாண்டு.

இடம் : பார்த்தசாரதி கோயில் உள் சுற்றில் தென்புறம் தரையில் ஒரு கல்லில் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டு மிகவும் சிதைந்து உள்ளது.

கல்வெட்டு :

1 . த்திரா நொவாய திருவாசலில் க . .
2 . . . த்திப்பராகக் கடவர்களாகவும் . .
3 . . . காயிலும் சுப்பிரமண்ணியப் . .
4 . . [க]ாம் பல மண்டல ஸ்ரீஈாசே[ஹ] . .

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்	:	42
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	கி.பி 12 அல்லது 13-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயில் உள் சுற்றில் தென்புறம் தரையில் ஒரு கல்லில் உள்ளது.

குறிப்புரை : திருவான்மியூர் உலகாளுடைய நாயனார்க்கு நுந்தாவிளக்கு வைப்பதற்கு 30 பசுக்களும் 1 காளையும் கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . த் திருவான்மியூர் உலகாளுடைய நாயனார் . .
2 . வதாகக் கடக்கங் கொண்டான் அழகிய மாத(வ)[1]ன(ன) . .
3 . ன் வைத்த திருநுந்தா விளக்கு ஒன்றினுக்கு இவ்வா . .
4 . பசு முப்பதும் இஷபம் ஒன்றும் ஆக உரு முப்பத் . .
5 . தித்தவரை திரு நுந்தா விளக்கு எரிக்க[க]டவதாக விட்டே . .

---

1. 'வ' என்ற எழுத்து விட்டு போயிருக்கலாம்.

தொடர் எண் : 1967/43

மாவட்டம் : சென்னை		வட்டம் : தென் சென்னை	
ஊர் : திருவல்லிக்கேணி		ஊர்க் கல்வெட்டு எண் : 43	
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —		முன் பதிப்பு : —	
எழுத்து : தமிழ்		மொழி : தமிழ்	
அரசு : —		மன்னன் : —	
ஆட்சி ஆண்டு : —		வரலாற்று ஆண்டு : சுமார் கி. பி. 13-ஆம் நூற்றாண்டு.	

இடம் : பார்த்தசாரதி கோயில் உள்சுற்று தென்புறம் தரையில் உள்ள ஒரு கல்லில் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டின் சிறு பகுதியே உள்ளது.

கல்வெட்டு :

1 . சம்பந்தனுலே . .
2 . டவோமாகவு . .
3 . க்கொண்டு சந் . .
4 . காணி உடைய . .
5 . செலுத்த கடவே(ா) . .

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்	:	44
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	சுமார் கி. பி. 13-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயிலில் மண்டபத்துத் தரையில் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டின் பகுதியே உள்ளது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஶ்ரீ திரிபுவனச்சக்கரவத்தி கே . .
2 யார் கோயிலில் தேவர்கன்மிகளுக்கும் மாஹே . .
3 ஞும் பாரையூரகரமான செம்பியன் புலியூர் நில நூற்று . .
4 யக் கடவதாகச் சொல்லிக் கணக்கி . .
5 ள்க எழுதிநான் திருமந்திர ஓலை நெறி . .
6 நாள் [ம]எ இவை தொண்டைமா . .

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்		45
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை		—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	சுமார் கி. பி. 14-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயிலில் மண்டபத்துத் தரையிலுள்ள ஒரு கல்லில் உள்ளது.

குறிப்புரை : வரிகளின் முன்னும் பின்னும் எழுத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன. நுந்தாவிளக்கு எரிப்பதற்காக 45 ஆடுகள் கொடையாகக் கொடுக்கப்பட்டுள்ளதைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . வாமூவாப் பேராடு கய . .
2 . [தி]ரு நுந்தாவிளக்கு . .
3 . ாற்பத்து ஐஞ்சும் பொ . .
4 னன் காருண்யன் கொண்ட . .
5 . டு நாற்பத்து ஐஞ்சும் பொலி . .
6 . சாவா மூவாப் பேராடு . .

தொடர் எண் : 1967/46

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்		46
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை		—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	சுமார் கி. பி. 15-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயில் உள்சுற்று வடபுறம் தரையில் உள்ள ஒரு கல்லில் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டின் பெரும்பகுதி அழிந்துள்ளது. ஒரு சில எழுத்துக்களே தெரிகின்றன.

கல்வெட்டு :

1 . . . .
2 . தத . ழ . . யுடு . .
3 . . . .
4 . . . .

தொடர் எண் : 1967/47

மாவட்டம் : சென்னை		வட்டம் :	தென் சென்னை
ஊர் : திருவல்லிக்கேணி		ஊர்க் கல்வெட்டு எண்	47
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை :	—	முன் பதிப்பு :	—
எழுத்து :	தமிழ்	மொழி :	தமிழ்
அரசு :	—	மன்னன் :	—
ஆட்சி ஆண்டு :	—	வரலாற்று ஆண்டு :	சுமார் கி.பி. 15-ஆம் நூற்றாண்டு.

இடம் : பார்த்தசாரதி கோயிலின் தாயார் மண்டபத்துத் தரையிலுள்ளது.

குறிப்புரை : எழுத்துகள் மிகவும் சிதைந்துள்ளன.

கல்வெட்டு :

1 . . . தத் தொருநாள் திருவொ . .
2 . ந்து இ[ருந்]து வெளிச்சேரி ஆ . . சந்திர . .
3 . ஞயனுர் திருந . . . .
4 . . . . . தளந்தும் அப்பமுது[க்[1]]கும் . .

1. இவ்வெழுத்து கல்வெட்டில் இல்லை.

தொடர் எண் : 1967/48

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்	:	48
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	கி.பி 12 அல்லது 13-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயில் கருவறையின் முன் உள்ள மண்டபத் தரையில் ஒரு கல்லில் உள்ளது.

குறிப்புரை : நுந்தாவிளக்கு எரிப்பதற்காக இருபத்தாறு [ஆடுகள்] கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . ர் நம்பியும் அருளாளனும் உள்ளிட்டோம் . .
2 . டும் ஆக உரு இருபத்தாறுக்கும் எரிக்க கடவ திருநு . .
3 . கக் கடவோம் இவ்வுரு இருபத்தாறுங் கைக்கொண் . .
4 . ரானநான தண்டிப் பிடிக்கோன் மக்களில் திருவ[ர] . .
5 . ர்க்கு இரண்டும் எரிய இட்ட குத்துவிளக்கு இரண் . .

தொடர் எண் : 1967/49

மாவட்டம் : சென்னை		வட்டம் : தென் சென்னை	
ஊர் : திருவல்லிக்கேணி		ஊர்க் கல்வெட்டு எண் : 49	
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —		முன் பதிப்பு : —	
எழுத்து : தமிழ்		மொழி : தமிழ்	
அரசு : —		மன்னன் : —	
ஆட்சி ஆண்டு : —		வரலாற்று ஆண்டு : கி. பி. 12 அல்லது 13-ஆம் நூற்றாண்டு	

இடம் : பார்த்தசாரதி கோயில் கருவறையின் எதிரில் உள்ள மண்டபத் தரைமீது உள்ள ஒரு கல்லில் உள்ளது.

குறிப்புரை : திருவான்மியூர் உலகாளுடைய நாயனருக்கு பூசைக்கும், திருப்பணிக்கும் கொடை அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . . . பண்ணியருளு[வதாகக் கைக்கொ]ண்டு திரு . .
2 . [1]ங்கொண்ட சோழமண்டலத்துப் புலியூர்க் கோட்டமான . .
3 . ழ வளநாட்டுக் கோட்டூர் நாட்டுத் திருவான்மியூர் உடையா .
4 . யனார்க்குப் பூசைக்கும் திருப்பணிக்கு முடலாக நித்தவிநோத . .
5 . நாட்டு நல்லூருடையான் அரையன் மலைகினிய நின்றானை சி . .
6 . ங்கொண்ட சோழமண்டலத்து ஆமூர்க் கோட்டத்துக் கு . .
7 . ாத்தப்பா[டி] விக்கிரமசோழப் பேரளத்து இன்நா . .

1. 'ஜயங்கொண்ட' என்று படிக்கவும்.

தொடர் எண் : 1967/50

மாவட்டம் : சென்னை

வட்டம் : தென் சென்னை

ஊர் : திருவல்லிக்கேணி

ஊர்க் கல்வெட்டு எண் : 50

இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —

முன் பதிப்பு : —

எழுத்து : தமிழ்

மொழி : தமிழ்

அரசு : —

மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —

வரலாற்று ஆண்டு : சுமார் கி. பி. 16-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயிலில் உட்சுற்றின் வடபுறத்தில் தரையிலுள்ள ஒரு கல்லில் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டின் ஒரு பகுதியே உள்ளது.

கல்வெட்டு :

1 . முப்பிள்ளை உ[டை] . .
2 . ஏம்மனூற்று கங்கா . .
3 . ஏ [நாழி] கொண்டு ஆண்டா . .
4 . . ற்று ஐஞ்சும் இறை இலிய[ாக] . .
5 . ா பார்த்தவனும் ஆண்டு . .
6 . [ஏ]ராம் வைத்த இந்த . .

தொடர் எண் : 1967/51

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்	:	51
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	சுமார் கி.பி 16-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயிலின் உள்சுற்றின் வடபுறம் தரையில் ஒரு கல்லில் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டின் பெரும்பகுதி சிதைந்துள்ளது.

கல்வெட்டு :

1 . . . . . . ள . . . . . . டும் . . .
2 . . . . . . பள்ளி . . . . . ந . . .
3 . . . . கு . . . . . .
4 . த்தே . . . . . ன . . .

தொடர் எண் : 1967 / 52

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்	:	52
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	கிரந்தம்	மொழி	:	சமஸ்கிருதம்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	சுமார் கி. பி. 16-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயில் உண்ணாழியின் வடக்குப் பக்கத் தரை. (வெளிப் பக்கம்)

குறிப்புரை : கல்வெட்டின் இடைப் பகுதியே உள்ளது.

கல்வெட்டு :

1 . . கும்பா[ந்]ஹிதமஜஹ[1] . . .
2 . . வதூரஇயம்விதெநெதயு[2] . .
3 . . ராஸ்வதாயக்ஷதெபத்மயெ[3] . .
4 . . ர்விஸதயா கஸ்சித்ஸாஜந்ய[4] . .
5 . . யமீதேவோஸோதவதே[5] . .
6 . . [ந]ாபிரஹிதோதத்தோபசார[6] . .
7 . . ஷா . ஶ்ரீயம்[த][7] . . . .

---

1. . . கும்பாந்தஹிதமஜஹ . . .
2. . . வதூரஇயம்விதெநெதயு . .
3. . . ராஸ்வதாயக்ஷதெபத்மயெ . .
4. . . ர்விஸதயா கஸ்சித்ஸாஜந்ய . .
5. . . யமீதேவோஸோதவதே . .
6. . . [த]ாபிரஹிதோதத்தோபசார . .
7. . . ஷா . ஶ்ரீயம்[த] . . . .

தொடர் எண் : 1967/53

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்	:	53
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	சுமார் கி.பி. 13-ஆம் நூற்றாண்டு.

இடம் : பார்த்தசாரதி கோயில் உள்சுற்றின் வடபுறத்தில் தரையில் உள்ள ஒரு கல்லில் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டின் ஒரு பகுதியே கிடைத்துள்ளது. கார்த்திகை பச்சை போன்ற வரியைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . ணப்ப இவ . .
2 . திகை பச்சை கா . .
3 . றிக் கலவண்குடி . .
4 . ாகும் மகம்மை த . .
5 . சுக்கு கடமை [ஆ] . .

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்	:	54
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	சுமார் கி. பி. 13-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயில் உட்சுற்றின் வடபுறத் தரையில் உள்ள ஒரு கல்லில் உள்ளது.

குறிப்புரை : வேளச்சேரியைக் குறிக்கிறது. பத்து வேலி நிலம் வரி நீக்கி அளிக்கப்பட்டதைத் தெரிவிக்கிறது.

கல்வெட்டு :

1 . . . . . வேண்டு வன்னுவயிற்று . .
2 . கோட்டத்து வேளச்சேரியான சினசிந்தாமணிச்ச . .
3 . மங்கலத்திலே ஒருபது வேலி நிலம் முப்பத்து . .
4 . து பசான்முதல் மடப்புற இறையிலியாக இடக்கடவ . .
5 . வேணும் என்று இவனமக்[கு]ச் சொன்னமையில் இ . .
6 . பயக் கடவதாகச் சொல்லிக் கணக்கிலுமிட்டுக் கொ . .
7 . க வரிக் கூறு செய்வார்களுக்கும் சொன்னோம் இன்றி . .
8 . ல மடப்புறத்துக்கு மடப்புற இறை . .

தொடர் எண் : 1967/55

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்		55
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை		—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	கி. பி. 13 அல்லது 14-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயில் தாயார் மண்டபத்தின் தரையில் உள்ள கல்வில் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டு மிகவும் சிதைந்துள்ளது.

கல்வெட்டு :

1 . . . .
2 . . . .
3 . நத்துக்கு போகும் தென்பாற் கெ . .
4 . . . . குல . .
5 . தேவதானம் திருவிடையாட்டம் . .

தொடர் எண் : 1967/56

மாவட்டம்	:	சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்	:	திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்	:	56
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	சுமார் கி. பி. 16-ஆம் நூற்றாண்டு

இடம் : பார்த்தசாரதி கோயிலில் உட்சுற்றின் வடபுறத்தில் தரையிலுள்ள ஒரு கல்லில் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டு மிகவும் சிதைந்துள்ளது.

கல்வெட்டு :

1 . ஹலி[1] . . . . . . குதப்பருயர் நன . .

2 . . . . உஉத்தா[2][ர்] . . . தன்மம் . .

---

1. 'பலி' 2. 'தம்மத்தார்' என்று படிக்கவும்.

தொடர் எண் : 1967/57

மாவட்டம்		சென்னை	வட்டம்	:	தென் சென்னை
ஊர்		திருவல்லிக்கேணி	ஊர்க் கல்வெட்டு எண்		57
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை		—	முன் பதிப்பு	:	—
எழுத்து	:	தமிழ்	மொழி	:	தமிழ்
அரசு	:	—	மன்னன்	:	—
ஆட்சி ஆண்டு	:	—	வரலாற்று ஆண்டு	:	கி. பி. 12 அல்லது 13-ஆம் நூற்றாண்டு.

இடம் : பார்த்தசாரதி கோயில் கருவறையின் முன் உள்ள மண்டபத் தரையில் உள்ள ஒரு கல்லில் உள்ளது.

குறிப்புரை : கோயிலில் திருவிழா எடுப்பதற்கு பரிசாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

